பக்கங்கள் 24

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 09 வெள்ளிக்கிழமை 25.07.2025 அதிர்வு 355

## பொதுமக்கள் பாதுகாப்பு பூஜ்ஜிய நிலைக்கு வீழ்ச்சி

### சரத் வீரசேகர குமுறல்



“பாதுகாப்புத்துறை பலப்படுத்தப்பட்டால் மாத்திரமே பொதுமக்கள் பாதுகாப்பை

04



## செம்மணி மனிதப் புதைகுழியில்

# 3 எலும்புக்கூடுகள் நேற்று அடையாளம்

### மொத்த எண்ணிக்கை 88 ஆக உயர்வு

(பிரபாகரன் டிலக்சன்)



யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின் போது மூன்று மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 88ஆக உயர்வடைந்துள்ளது.

04

## புலிகள் இயக்கத்தை மீளுருவாக்க முயற்சி: குற்றஞ்சாட்டப்பட்ட 16 பேர் நேற்று விடுதலை

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயற்சித்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்ட 16 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேஷ் வீரமன், அவர்களை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிகளில் யாழ்ப்பாணம், பூநகரி மற்றும் பருத்தித்துறை ஆகிய இடங்களில், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய

04






அவர் எனது நண்பர். ஒரு சிரேஷ்ட சட்டத்தரணி. சட்ட நுணுக்கங்கள் நன்கு அறிந்தவர். நேற்று மாலையில் அழைப்பு எடுத்தார்.

எடுத்த எடுப்பில் ஒரு கேள்வி கேட்டார்.

“உங்களுக்கு அச்சுக் கூட வேலைகளும் தெரியுமல்லவா?” - என்பதுதான் அந்தக் கேள்வி.

ஏதோ என் திறமையைப் பரிசோதிக்கின்றார் என்ற நினைப்பில் நான் என் தற்பெருமையைப் பீற்றிக் கொண்டேன்.

“நான் ஊடகவியலாளன் மட்டுமல்லன். அச்சுத் துறையிலும் அனுபவம் மிக்கவன்தான். நான் பணியாற்றிய ஊடகங்களில் அச்சக முகாமையாளராகவும் நீண்ட காலம் கடமையாற்றி இருக்கிறேன்.

03





# மனிதப் புதைகுழிகளுக்கு நீதி வேண்டி மன்னாரில் நேற்று கவனவீர்ப்புப் பேரணி

(மன்னார் நிருபர்)

வடக்கு, கிழக்கில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள மனிதப் புதைகுழிகளுக்கு நீதி வேண்டி மன்னார் – அடம்பன் சந்தியில் இருந்து திருக்கேதீஸ்வரம் – மாந்தை மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடம் நோக்கி நேற்று வியாழக்கிழமை காலை அமைதிப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

மாந்தை மேற்கு வெகுஜன அமைப் புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த அமைதிப் பேரணி நடத்தப்பட்டது.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் சந்தியில் நேற்று காலை 10 மணியளவில் அமை திப் பேரணி ஆரம்பமானது.

இந்தப் பேரணியில் கலந்து கொண்டவர்கள், பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாகப் பயணித்தனர்.

திருக்கேதீஸ்வரம் – மாந்தை மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தை நோக்கிப் பேரணி சென்றடைந்தது.

"எங்கே எங்கள் உறவுகள் எங்கே?, இலங்கை அசரே இது நாடா அல்லது இடு காடா?, வேண்டும் வேண்டும் சர்வ தேச விசாரணை வேண்டும், மனிதனும் புதை குழிக்குள் நீதியும் புதை குழிக் குள்ளா?, சர்வதேசமே மௌனத்தைக் கலை" உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் அடம்பனி யில் இருந்து திருக்கேதீஸ்வரம் – மாந்தை மனிதப் புதைகுழி நோக்கிப் பேரணி சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ் வரம் – மாந்தை மனிதப் புதைகுழிக்கு முன் ஒன்றுகூடி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும், மனிதப் புதைகுழி யில் மீட்கப்பட்டவர்களுக்காகவும் அஞ்சலி செலுத்தப்பட்டு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்னர் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளாரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஏற்பாட்டுக் குழு சார்பாகக் கையளிக்கப்பட்டது.















# எந்தவொரு மாணவரும் பாடசாலை கல்வியிலிருந்து இடைவிலகாத வகையில் புதிய கல்வி மறுசீரமைப்பு

## ஜனாதிபதி நாடாளுமன்றில் உரை

எந்தவொரு மாணவரும் பாடசாலை கல்வியிலிருந்து இடைவிலகக்கூடாது என்பதை நோக்கமாகக் கொண்டு புதிய கல்வி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நாட்டில் தற்போதுள்ள கல்வி முறைமையின் ஊடாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து திருப்தி அடைய முடியாத நிலை காணப்படுகிறது. எனவே, தற்போது முழுமையான கல்வி மறுசீரமைப்பு அவசியமாக வுள்ளது.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் கருத்துரைக்கின்ற போதும் பலரும் பாடங்கள் குறித்து மாத்திரம் கவனம் செலுத்துகின்றனர்.

எனினும் சமூக, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் புதிய கல்விமறுசீரமைப்புமேற்கொள்ளப்படும்.

தற்போது பல சந்தர்ப்பங்களில் உயர்கல்வி முறைமை தொடர்பில் மாத்திரமே கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் தற்போது பாடசாலை கல்வியில் பாரிய பிரச்சினைகள் உள்ளன.

இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான மனித வளம் உள்ளது அதனை உரிய முறையில் பயன்படுத்திச் சிறந்த கல்வியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

அதேநேரம், பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாக கூறப்படுகின்ற நிலையில் மறுபுறம் மிகவும் குறைந்த மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளும் இயங்குகின்றன.

இதன்படி, 10 மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கையை கொண்ட 115 பாடசாலைகள் நாட்டில் இயங்குகின்றன. 20க்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையை கொண்ட 406 பாடசாலைகள் இயங்குகின்றன.

எனவே, மாணவர்கள் தங்களது சமூகத்திலிருந்து வெளியேறி முன்னோக்கி பயணிக்கும் சமூகத்தை உருவாக்க வேண்டும்." – என்றார்.

---

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தக அச்சுக்கூடங்களையும் நடத்தி இருக்கிறேன்." - என்று நான் என் பெருமையைப் பீற்றினேன்.

"அப்படியானால் உங்களுக்கு அச்சக வேலைகளும் நன்கு தெரியும், அப்படித்தானே...?" என்றார் அந்த நண்பர்.

"ஆமாம்... அதில் என்ன சந்தேகம்? folding, gathering, binding, numbering என்று தொடங்கி மெஷின் மைண்டர் வேலை வரை எல்லாம் செய்த அனுபவம் உண்டு." என்று பெருமையடித்தேன் நான்.

"அப்படியா...? எதிர்காலத்தில் நன்கு உதவும்" - என்று அவர் கூறிய போது "எனக்கு விளங்கவில்லை. ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

அவர் சொன்ன பதில் என்னைத் திடுக்குற வைத்தது.

"உயர்நீதிமன்றத்தினால் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுக்கு இலக்காகி கடூழியச் சிறை தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவுக்கு சிறைச்சாலை அச்சகத்தில்தான் வேலை ஒதுக்கப்பட்டது. அதுபோல இப்பொழுது சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர்கள் மஹிந்தானந்த அளுத்கமகேக்கும், நவீன் பெர்னாண்டோவுக்கும் சிறைச்சாலை அச்சகத்தில் தான் வேலை கொடுக்கப்பட்டிருக்கின்றது. நீங்களும் நாளைக்கு சிறைத் தண்டனையை எதிர்கொண்டால் சிறையில் இருக்கும் அச்சகத்தில் வேலை செய்யலாம். அதற்கான முன் அனுபவமும் உங்களுக்கு உண்டு தானே..?" - என்று சற்று கிண்டலாகக் கேட்டார் அந்தச் சட்டத்தரணி.

நான் வெலவெலத்துப் போனேன்.

"எனக்கு ஏன் சிறைத் தண்டனை...?" - என்று பவ்யமாகக் கேட்டேன்.

"உயர் நீதிமன்றத்தை விமர்சித்து நீங்கள் இன்று (நேற்று) வரைந்த உங்கள் பத்தியை வாசித்தேன். அந்த விடயத்தை ஒட்டி நீதிமன்றம் உங்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முன்னெடுத்தால் அப்படித்தான் ஆகும்...!" என்றார் அவர்.

"அப்படியா இருக்கின்றது என் எழுத்து...?" - என்று மனதுக்குள் மிரண்டபடி அவரிடம் கேட்டேன்.

அவர் சிரித்தார்.

"இல்லை... இல்லை... பகிடிக்குச் சொன்னேன். உயர் நீதிமன்றத்தின் செயற்போக்குக் குறித்து சட்டத்தரணிகள் மற்றும் நீதித் துறைத் தரப்புகளுக்கும், பொது மக்களுக்கு இருக்கும் ஆதங்கத்தை வெளிப்படையாக - தெளிவாக - சான்றாதாரங்களோடு - நீங்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றீர்கள். அதில் நீதிமன்றத்தை அவமதிக்க வேண்டும் என்ற தொனி வெளிப்படவில்லை. மாறாக நீதிமன்றம் - குறிப்பாக உயர் நீதிமன்றம் - தன் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் நியாயப்படுத்தக் கூடிய வகையில் முன்னெடுக்க வேண்டும் என்பதைதான் நீங்கள் வலிமையாக - வெளிப்படையாக - சுட்டிக்காட்டி உள்ளீர்கள். நீதிமன்றத்தை அவமதிக்க வேண்டும் என்ற குற்றமனம் அதில் இல்லை. ஆனால் நீதிமன்றம் இழைக்கும் தவறு வெளிப்படையாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஒருவகையில் நீங்கள் எழுதி இருப்பது whistle blowing matter. இதை யாராவது சிங்களத்தில் எழுதி இருந்தால் இன்னும் பிரயோசனமாக இருக்கும். உயர் நீதிமன்றம் தானாகவே தன்னைத் திருத்திக் கொள்ள முயலும் நடவடிக்கையை - சுயமாகவே முன்வந்து எடுப்பதற்கு இத்தகைய எழுத்துத் தூண்டியிருக்கும். ஆயினும் இப்படி உயர் நீதிமன்றத்தை வெளிப்படையாக விமர்சிக்கும் துணிச்சல் - அதன் ஆழத்தைப் புரிந்து கொண்ட ஒரு பத்திரிகையாளரிடமிருந்து வெளிப்படுவது ஆச்சரியத்துக்குரியதுதான்..." என்றார் அவர்.

நீதிமன்ற விவகாரத்தில் என் எல்லை மீறி நடந்து கொண்டு விட்டேனோ என்ற வினா இன்னும் என் மனதில் நெருடலாக நீடிக்கின்றது...!

பார்ப்போம் விளைவுகளை...!



## 3 எலும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 19 ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது மூன்று மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட ஒன்பது என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 88 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 76 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் தடயவியல் அகழ்வாய்வுத் தளம் ஒன்றில் இருந்து இரும்புகள் என நம்பப்படும் ஒரு தொகுதி கட்டிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அதே வேளை, நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட சிறு போத்தல் ஒன்று நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.நீதிவான்ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியல் துறை மாணவர்களும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடதக்கது.

## பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்த முடியம். இவ்வாறு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததால்தான் இன்று பொதுமக்கள் பாதுகாப்பு பூஜ்ஜிய நிலைமைக்கு வீழ்ச்சியடைந்துள்ளது."

– இவ்வரசு முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் நிலாந்த ஜயவர்தனவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதனுடன் நேரடியாகத் தொடர்புடைய இப்ராஹிம் என்ற நபர் இன்னும் பொது வெளியில் சுதந்திரமாகவே நடமாடிக் கொண்டிருக்கின்றார். அவர் தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருந்த நபர் ஆவார்.

கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் தாக்குதல்களை மேற்கொண்ட பிரதான சந்தேகநபரின் மனைவி எனக் கூறப்படும் சஹரா ஜெஸ்மின் தொடர்பிலும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இவ்வாறு பேசப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களை முற்றுமுழுதாக அரசியல் மயப்படுத்தியுள்ளனர்.

இந்த விசாரணைகளில் இருந்து மக்கள் திசை திருப்பப்பட்டுள்ளனர். இந்த விவகாரம் இவ்வாறு அரசியல் மயப்படுத்தப்படுவது தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை அவமரியாதைக்கு உட்படுத்துவதாகும்.

இன்று இந்த நாட்டில் பொதுமக்கள் பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. நாளாந்தம் ஏதேனுமொரு பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. இவை பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் எனத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாத போதிலும் மக்கள் அச்சத்துடனேயே நடமாடிக் கொண்டிருக்கின்றனர்.

புலனாய்வுப் பிரிவு இதனை விட உத்வேகத்துடன் செயற்பட வேண்டும். பொலிஸாருக்கு வேண்டிய சலுகைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். பாதுகாப்புத் துறை பலப்படுத்தப்பட்டால் மாத்திரமே பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியம். இவ்வாறு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததால்தான் இன்று பொதுமக்கள் பாதுகாப்பு பூஜ்ஜிய நிலைமைக்கு வீழ்ச்சியடைந்துள்ளது." – என்றார்.

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயன்றனர் என்றும், 2018 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் ஆயுதம் மற்றும் வெடிப்பொருட்களைச் சேகரித்தனர் என்றும் குற்றம் சுமத்தி, சட்டமா அதிபரால் இவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

எனினும், பிரதிவாதிகளின் தரப்பு சட்டத்தரணிகளின் வாதங்களை ஏற்ற, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, மேற்படி 16 பேரையும் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்து விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

சட்டமா அதிபரின் குற்றப்பத்திரம் நடைமுறையில் இருந்தாலும், நீதிமன்ற நியாயாதிக்க எல்லை என்ற அடிப்படையில், மேற்படி 16 பேரும் யாழ்ப்பாணம் பிராந்தியத்தில் இடம்பெற்றன என்று கூறப்படும் குற்றங்கள் தொடர்பிலேயே குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் அவர்களுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் வழக்கை விசாரிக்க முடியாது என்ற பிரதிவாதி தரப்பு சட்டத்தரணிகளின் வாதத்தை ஏற்ற நீதிபதி, மேற்படி 16 பேரையும் விடுதலை செய்துள்ளார்.



# மன்னார் - நானாட்டான் பகுதியில் உள்ள வீட்டில் புகுந்து பட்டப் பகலில் கத்திமுனையில் தங்க நகைகள் கொள்ளை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் – நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நானாட்டன் – முருங்கன் வீதியில் வசித்து வரும் ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவரின் வீட்டில் புகுந்த முகமூடித் திருடன் கத்தியைக் காட்டி மிரட்டி கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளான் எனத் தெரிய வருகிறது.

இந்த சம்பவமானது புதன் கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியை வீட்டில் தனிமையில் இருந்த போது பின் பக்க வேலியால் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையன் வீட்டின் அருகில் வங்கிகளும் கடைகளும் இருந்த போதும் சத்தம் போடக் கூடாது என்று கத்தி முனையில் மிரட்டி, ஆசிரியையின் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியைக் கொள்ளையிட்டமையுடன் ஆசிரியை கையில் அணிந்திருந்த வளையல்களை கழற்ற முடியாமல் விட்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளான் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தசக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் முருங்கன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. முருங்கன் பொலிஸார் வருகை தந்து சம்பவ இடங்களைப் பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

ஓய்வு பெற்ற ஆசிரியை யிடமிருந்து முகமூடிக் கொள்ளையன் சுமார் 7 லட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியை கொள்ளையடித்துச் சென்றுள்ளான் என தெரிய வருகிறது.இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழில் கஞ்சாவுடன் நேற்று இருவர் கைது!

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சா போதைப்பொருளுடன் நேற்று இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 12 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் இதன்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கல்வித் துரதிர்ஷ்டம்

தற்போது முன்மொழியப்பட்டிருக்கும் கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஒத்திவைப்பு விவாதத்தின் போது நேரில் பிரசன்னமாகி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உரையாற்றி இருக்கிறார்.

அந்த உரையில் பாடசாலைகளில் இருந்து மாணவர்களின் இடைவிலகல்கள் மற்றும் பாதிப்புகள் குறித்து அவர் வெளியிட்ட புள்ளி விவரங்கள் அதிர்ச்சி தருவனவாக இருக்கின்றன.

பாடசாலைகளில் 13 வருட கல்வியை முடிக்காமல் எந்தப் பிள்ளையும் பாடசாலையை விட்டு இடையில் வெளியேறாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

2019 இல் 16 ஆயிரத்து 673 பேரும், 2022 இல் 20 ஆயிரத்து 759 பேரும், 2024 இல் 20 ஆயிரத்து 755 பேரும் பள்ளிப்படிப்புக்களை இடைநிறுத்தி உள்ளனர் என்று அவர் கூறியிருக்கிறார்.

2006 ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைகளில் 3,58,506 குழந்தைகள் முதலாம் வகுப்பில் கல்விக்குச் சேர்ந்தன. ஆனால் 2021 இல் அவர்களில் ஆக மூன்று லட்சத்து 11 ஆயிரம் பேர் மட்டுமே சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். 47 ஆயிரம் பேர் இடையில் கணக்கில் வராத சூழ்நிலையை ஜனாதிபதி சுட்டிக் காட்டி இருக்கிறார்.

''சிலர் தனியார் பாடசாலை கல்வியை அல்லது வெளிநாட்டு கல்வியை தொடர்ந்து இருக்கலாம். ஆனால் பெரும் எண்ணிக்கையானோர் பாடசாலையை விட்டு இடைவிலகி இருக்கின்றனர்'' - என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டுவது உண்மையானதுதான்.

அரசு பள்ளிகளில் 2023 ஆம் ஆண்டில் 96 பாடசாலைகளில் புதிய மாணவர்கள் சேரவே இல்லை. 115 பாடசாலைகளில் பத்துக்கும் குறைவான மாணவர்களும், 46 பாடசாலைகளில் 20க்கும் குறைவான மாணவர்களும், 752 பாடசாலைகளில் 30க்கும் குறைவான மாணவர்களும், 1,042 பாடசாலைகளில் 40 க்கும் குறைவான மாணவர்களும் சேர்ந்து இருக்கின்றார்கள். 50 க்கும் குறைவான மாணவர்கள் 156 பாடசாலைகளில் சேரும் நிலை உள்ளது.

அரசு பாடசாலைகளில் 15 வீத மானவற்றில் மாணவர் எண்ணிக்கை 50க்கும் குறைவு. மூன்றில் ஓர் அரசுப் பாடசாலைகளில் மாணவர்கள் எண்ணிக்கை 100 ஐ எட்டவில்லை.

இத்தகைய பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு வழமையான பாடசாலைகளின் நிகழ்வுகள், விளையாட்டுக்கள், சுற்றுலாக்கள் மற்றும் சக மாணவர்களுடனான தொடர்பாடல்கள் என்பவை எல்லாம் எட்டாமல் போய்விடுகின்றன என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டுகின்றார்.

இந்தப் பின்புலத்தில் பாடசாலைகளின் எண்ணிக்கை, அவற்றின் அமைவிடங்கள், மாணவர்கள் எண்ணிக்கை, ஒரு முழு அளவிலான பாடசாலைகளாக ஒவ்வொரு பள்ளிகளும் அமைவது ஆகியவை தொடர்பில் ஒரு புதிய பார்வை - புதிய அணுகுமுறை - புதிய கொள்கைப்போக்கு-தேவைப்படுவதாகவே தோன்றுகின்றது.

இப்போது இந்த அரசு அறிமுகப்படுத்த விழையும் கல்விச் சீர்திருத்தங்கள் இந்த நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் வழிவகைகளைக் கொண்டிருக்கவில்லை என்பதுதான் இவ்விவகாரத்தில் நிலவும் பெரும் துரதிஷ்டமாகும்.





# மயிலிட்டி பேச்சியம்பாள் ஆலயத்தின் ஆறாம் நாள் கைலாச வாகனத் திருவிழா

மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலயத்தின் நான்காவது வருடாந்த மகோற்சவத்தின் ஆறாம் நாள் கைலாச வாகனத் திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை வெகு சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளது.

புதிதாக செய்யப்பட்ட கைலாச வாகனத்தில் முதன் முறையாக மகோற்சவத்தின் போது பேச்சி அம்பாள் எழுந்தருளி வீதி உலா வந்தமை குறிப்பிடத்தக்கது.








# மாமுனை நாகதம்பிரான் சப்பைரத திருவிழா

மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோயில் சாந்திக அலங்கார உற்சவப் பெருவிழாவின் 10 ஆம் நாள் உற்சவமான சப்பைரத திருவிழா சிறப்புற இடம்பெற்றுள்ளது.

வே.தம்பாப்பிள்ளை மற்றும் வே.முருகேசு குடும்பத்தாரின் உபயமாக கடந்த புதன்கிழமை இந்த சப்பைரத திருவிழா இடம்பெற்றுள்ளது.






# வவுனியாவில் உயர் தர வணிகப் பிரிவு மாணவருக்கு வழிகாட்டிக் கருத்தரங்கு

“வியாபாரமும் துணைநிலைச் சேவைகளும்” என்ற தலைப்பில் வணிகக் கல்வி கருத்தரங்கு வவுனியாவின் இரம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வை வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ துறையின் சந்தைப்படுத்தல் கழகமும் மற்றும் வவுனியா கல்வி வலயமும் இணைந்து மேற்கொண்டனர்.

வவுனியா வலயத்தை சேர்ந்த 14 பாடசாலைகளை சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வமுடன் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் கருந்தரங்கு வளவாளர்களான சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறையின் சிரேஷ்ர விரிவுரையாளர்களான எஸ்.ஏ. யூட் லியோன், திருமதி கயேந்தி, சிவநேந்திரா, துஷ்யந்தன் ஆகியோரால் நடத்தப்பட்டது.



ஒவ்வொரு அமர்வும் மாணவர்களுக்கு ஆழமான விளக்கங்கள், நிஜ வாழ்க்கை உதாரணங்கள் மற்றும் கலந்துரையாடல்களை வழங்கி, அவர்களின் கல்விக்கு மேலும் செறிவூட்டும் விதமாக அமைந்திருந்தது.

இந்த முயற்சியானது வவுனியாப் பல்கலைக்கழகத்தின் சமூகத்தில் ஈடுபாடும், வளமான கல்வி வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருப்பதையும், கல்வி கருந்தரங்குகளை முன்னெடுக்கும் செயலில் ஈடுபாட்டையும் வெளிப்படுத்துகிறது.

கருத்தரங்கை வணிகக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி சுபாஜினி மற் றும் சிரேஷ்ட விரிவுரையாளர் சி.சிவநேந்திரா ஆகியோர் ஒழுங்கு செய்தனர்.

துணைவேந்தர் பேராசிரியர் ஏ. அற்புதராசா, பீடாதிபதி பேராசிரியர் யோ. நந்தகோபன் மற்றும் வலயகல்வி பணிப்பாளர் உத்தியோகத்தர்களுக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் நன்றி தெரிவித்தனர்.

# பெப்ரவரி 9 மின்விநியோகம் தடை தொடர்பில் சாட்சி விசாரணைகளை முன்னெடுக்க தீர்மானம்

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு

கடந்த பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி நாடு முழுவதும் மின்விநியோகம் தடைப்பட்டமை குறித்து சாட்சி விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இலங்கை மின்சார சபை முன்னெடுத்த விசாரணைகளின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இந்த சாட்சி விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக ஆணைக்குழுவின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் கருத்துக் களை முன்வைக்க விரும்புவோர் 0772 94 3193 எனும் தொலைபேசி இலக் கத்தை தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தெஹிவளை நகர சபை பரிசோதகரை இலக்கு வைத்து துப்பாக்கி சூடு முயற்சி

தெஹிவளை – பார்க் வீதியில் நகர சபை பரிசோதகரை இலக்கு வைத்து நேற்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் அதிகாரியை இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்த போதிலும் அந்த சந்தர்ப்பத்தில் துப்பாக்கி இயங்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்பின்னர் துப்பாக்கிதாரி அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்திற்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பில் 03 குழுக்களின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# பஸ் நடத்துநரின் நேர்மையை பாராட்டிய வெளிநாட்டு ஜோடி

பஸ்ஸில் கண்டெடுத்த ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தை உரியவர்களிடம் ஒப்படைத்த நடத்துநரின் நேர்மைக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெய்ன் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப்பயணிகள் இருவர் கண்டியிலிருந்து மஹியங்கனை நோக்கி பயணித்துள்ளனர்.

இதன்போது தமக்கு சொந்தமான ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தை அவர்கள் பஸ்ஸில் தவறவிட்டுள்ளனர்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இருவரும் மஹியங்கனையில் தாம் தங்கும் ஹோட்டலுக்கு சென்ற பின்னரே கைக்கடிகாரம் பஸ்ஸில் தவறவிட்டிருப்பதை உணர்ந்துள்ளனர்.

தெஹியத்தகண்டிய, நுவரகல நோக்கி பயணிக்கும் தனியார் பஸ்ஸிலேயே அந்த கைக்கடிகாரம் தவறவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஹோட்டல் உரிமையாளரிடம் அவர்கள் விடயத்தைக்கூற அந்த பஸ்ஸின் டிக்கெட்டில் இருந்த தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்புகொண்டு கைக்கடிகாரம் தவறவிடப்பட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ்ஸை இரவு துப்புரவு செய்யும் போது நடத்துநர் கைக்கடிகாரத்தை கண்டெடுத்ததாகவும் அதனை உரியவர்களிடம் மறுநாள் ஒப்படைப்பதாகவும் பஸ்ஸின் உரிமையாளர் ஹோட்டல் உரிமையாளரிடம் தெரிவித்துள்ளார்.

மஹியங்கனையில் சம்பந்தப்பட்ட இரண்டு சுற்றுலாப் பயணிகளிடமும் நடத்துநரால் கைக்கடிகாரம் ஒப்படைக் கப்பட்டதுடன், அதனை மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்ட அவர்கள் இலங்கை மக்களின் நேர்மையை பாராட்டி நன்றி தெரிவித்தனர்.

கண்டியைச் சேர்ந்த 32 வயதான சந்தன திசாநாயக்க எனும் நடத்துநரே நேர்மையான இந்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.



# ஒரு பில்லியன் டொலர் இழப்பீடு வழங்குமாறு எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனத்திற்கு உத்தரவு

இலங்கையின் கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்குள்ளானதால் ஏற்பட்ட கடல் சூழல், பொருளாதார இழப்பிற்கான, இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு பில்லியன் டொலர் இழப்பீடு வழங்குமாறு சிங்கப்பூர் கப்பல் நிறுவனத்திற்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த பேரழிவைத் தடுக்கத் தவறியதன் மூலம், அப்போதைய கடலோரப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவாவும் மற்றொரு தரப்பினரும் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என உயர்நீதிமன்றம் தமது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது.





# உடப்பு திரௌபதியம்மன் ஆலயத்தில் வெளிக்கொடியேற்றம் பக்திபூர்வமாக!

(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் மாவட்டம், உடப்புக் கிராமத்தில் அமைந்துள்ள உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் வெளிக்கொடியேற்றம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

கொடிச்சீலையானது தலைவர் வை.கந்தசாமி உட்பட பக்தர்களினால் சுமக்கப்பட்டு உள்வீதி, வெளிவீதி வலம் வந்து பின்னர் கொடியேற்றம் இடம் பெற்றது.

இந்தக் கொடியானது அனுமனுக்காக ஏற்றப்படுகின்றது.

கொடிச்சீலையில் பறக்க விடப்படும் அனுமன் கொடி குறித்துப் புராணக் கதை உள்ளது.பஞ்ச பாண்டவர்களில் ஒருவரான வீமன் பாரிசாதமலர் பறிப்பதற்காக இந்திரலோகம் செல்கின்றான். வழியில் கிழக்குரங்கொன்றை சந்தித்து, அந்தக் கிழக்குரங்காகிய அனுமனின் வேண்டுதலின் பெயரில், நடைபெறவிருக்கும் மகாபாரத யுத்தத்திற்குப் பக்கபலமாகவும் வெற்றிற்கு உறுதிணையாகவும் இருந்து அருச்சுணனின் தேர்க் கொடியில் பறக்க விடுமாறு வேண்டுகின்றான்.அதனை நினைவு கூருவதாகவே இந்தக் கொடியேற்றம் இடம் பெறுகின்றது.





# இன்று உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல் விழா உற்சவத்தில் இன்று கொடியேற்றம்; 09 இல் தீர்த்தம்



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று 25ஆம் தேதி வெள்ளிக்கிழமை கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகின்றது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா தெரிவித்தார்.

உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலய கொடியேற்றம் இன்று 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆலயபிரதம குரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக 15 நாள்கள் திருவிழாக்கள் இடம் பெற்று, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 09ஆம் திகதி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம் பெறும்.

இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்ற தினத்தன்று அன்னதானம் காரைதீவு ஆலையடிவேம்பு மடங்களில் சிறப்பாக நடைபெறும்.

உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.









# மன்னார் மடுத் திருத்தல ஆவணித் திருவிழா குறித்து அரச அதிபர் தலைமையில் விசேட கலந்துரையாடல்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியில் இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் பட்டுள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்த விசேட கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா எதிர்வரும் ஆவணி மாதம் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி விசேட திருவிழாவாக இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான ஆயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நேசன் அடிகளார் மற்றும் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது.

வருடா வருடம் மடு அன்னையின் ஆவணித் திருவிழாவில் கலந்து கொள்ள நாட்டின் பல பாகங்களில் இருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் அங்கு கூடுவது வழமை.

வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய சகல விதமான ஏற்பாடுகள் குறித்தும் அழைக்கப்பட்ட திணைக்களங்களுடன் நேற்றுக் கலந்துரையாடப்பட்டது. சுகாதாரம்,போக்குவரத்து, மருத்துவ வசதிகள், நீர் விநியோகம், உணவு விநியோகம் உள்ளிட்டவை குறித்து ஆராயப்பட்டது.

மேலும் சட்டம் – ஒழுங்கைப் பின்பற்றும் வகையில் முப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்த முன்னாயத்த கலந்துரையாடலில், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், ராணுவம், காவல்துறையினர், கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள், மற்றும் அழைக்கப்பட்ட திணைக்களங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.









# சட்டவிரோத சொத்துக் குவிப்பு குறித்து சிறீதரன் எம்.பிக்கு எதிராக முறைப்பாடு

சட்டவிரோத சொத்துக் குவிப்பு தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு எதிராகப் பொலிஸ் தலைமையகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் நேற்று முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

சிவில் சமூகச் செயற்பாட்டாளர் ஒருவர் இந்த முறைபாட்டைப் பதிவு செய்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு பாடசாலை அதிபராகக் கடமை புரிந்த சிவஞானம் சிறீதரன், அரசியலில் பிரவேசித்து, நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி ஏற்றார்.

இந்தநிலையில் திடீரெனக் கோடிக் கணக்கில் எவ்வாறு சொத்துக்களைச் சம்பாதித்தார் என்பது தொடர்பில் சிறீதரன் தெளிவுப்படுத்த வேண்டும் எனக் கோரி, அவருக்கு எதிராக இந்த முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றான கிளிநொச்சியில் அதிபராகப் பணியாற்றிய அவர், திடீரெனக் கோடிக்கணக்கில் சொத்துக்களைச் சம்பாதித்ததில் ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சிவில் சமூகச் செயற்பாட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரான சிறீதரனுடைய மனைவியின் பெயரில் குளிர்களி விற்பனை நிலையங்கள் இரண்டும், அவருடைய மகளுடைய பெயரில் சிறப்பு அங்காடிகள் இரண்டும் இயங்குவதாகவும் தமது தேடல்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், கடந்த ஆட்சியின் போது வழங்கப்பட்ட மதுபானசாலை உரிமங்கள் இரண்டும் சிறீதரனின் பெயரில் இருக்கின்றன என்றும் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், மேற்படி சொத்துக்களைச் சம்பாதித்த முறை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெளிவுப்படுத்த வேண்டும் என்றும் முறைப்பாட்டாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.





# வெருகல் வட்டவன் தொல்லியல் பகுதியா? ஒருங்கிணைப்புக் குழுவில்தான் தீர்மானம்!

## பிரதேச சபைத் தவிசாளரின் ஆட்சேபனையால் முடிவு இடைநிறுத்தம்

(எஸ்.கீதபொன்கலன்)

வெருகல் பிரதேச செயலக பிரிவின் வட்டவன் பகுதியில், தொல்லியலுக்கான இடங்கள் இருக்குமாயின் அது பற்றிய தீர்மானம் எதிர்வரும் வெருகல் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலேயே எடுக்கப்பட வேண்டும், மாறாக இன்று (நேற்று) இந்த இடத்தில் எவ்வித முடிவுகளும் எடுக்கப்படக்கூடாது என்று நேற்று இப்பகுதியில் தொல்லியல் பகுதிகள் உள்ளனவா என்பதை பார்வையிடும் களவிஜயத்தின் போது அங்கிருந்த அதிகாரிகளுக்கு தமது ஆட்சேபனையை முன்வைத்து தீர்மானம் எடுப்பதை இடைநிறுத்தச் செய்தார் வெருகல் பிரதேச சபையின் தவிசாளர் சே.கருணாநிதி.

வட்டவன் பகுதியில் தமிழ் மக்களுக்கு சொந்தமான வயற்காணிகள் உள்ளன. இக்காணிகளின் நடுவில் சிறு குன்றுப் பகுதியும் உள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் தொல்லியல் துறையினர் இப்பகுதியை தொல்லியல் பகுதி எனக்கூறி அறிவித்தல் பலகை ஒன்றை நட்டிருந்தனர். பின்னர் பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து அது அகற்றப்பட்டது.



இதனை அடுத்து சென்ற 17ஆம் திகதி நடைபெற்ற வெருகல் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுகூட்டத்தில் இவ்விடயம் ஆராயப்பட்டது. அப்போது தொல்லியல் துறையினர், வனவள பாதுகாப்பு திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், பிரதேச செயலகம், பிரதேச சபை என்பன இணைந்து அந்த இடங்களைப் பார்வையிட வேண்டும். பின்னர் அது தொடர்பான அறிக்கை நடைபெறவுள்ள ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முன்வைக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் பொருத்தமான தீர்மானம் எடுக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் நேற்றைய களவிஜயத்தின் போது இறுதி முடிவை எடுக்க தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் முயற்ச்சித்த போதே பிரதேச சபை தவிசாளர் தமது ஆட்சேபனையை முன்வைத்து தீர்மானம் மேற்கொள்வதை இடைநிறுத்தச் செய்துள்ளார்.





# கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் அடாவடி அதிகாரம் பண்ணிய பிக்கு

(எஸ்.கீதபொன்கலன்)

கன்னியா வெந்நீரூற்று சிவன் ஆலயத்தில் நேற்று ஆடி அமாவாசை பிதுர் கடமை செய்தவர்கள் தானமாக வழங்கிய 100 கிலோவிற்கும் அதிகமான மரக்கறிப் பொருள்கள் மற்றும் பூசை செய்வதற்கு பயன்படுத்திய பொருள்கள் என்பவற்றை ஏற்றிச் செல்ல வந்த ஓட்டோவை பொருள்களை ஏற்றவிடாது தடுத்து அந்த இடத்தில் இருந்து ஓட்டோவை வெளியேற்றி, அடாவடியில் ஈடுபட்டார் அப்பகுதியில் உள்ள பௌத்த பிக்கு.

நேறைய தினம் காலை 7.00 மணி முதல் பகல் 11.00 மணி வரை இங்குள்ள சிவன் கோவிலில் ஆடி அமாவாசை பிதுர்கடன் நிறைவேற்றுவதற்கான பூசைகள் நடத்துவதற்குரிய அனுமதி உத்தியோகபூர்வமாக ஏற்பாட்டுக் குழுவினருக்கு வழங்கப்பட்டிருந்தது.



இந்நிலையில் 10.55 மணியளவில் பூசைகளில்ஈடுபட்டிருந்தபூசகர்கள்தமக்கு தானம் வழங்கப்பட்ட பொருள்களை ஏற்றுவதற்கு முச்சக்கர வண்டி ஒன்றை அழைத்த போதே பௌத்த பிக்கு அங்கு வந்து வாகனத்தை வெளியில் கொண்டு போகுமாறு வாகன சாரதியை ஏசினார்.

பூசை நடைபெற்ற கோயிலுக்கும் கன்னியா வெந்நீரூற்றுக்கு செல்லும் பிரதான வாசலுக்கும் இடையில் சுமார் 150 மீற்றர் தூரம் உள்ளது. இதனை அடுத்து மிகுந்த சிரமத்துடன் பொருள்கள் அனைத்தும் அங்கிருந்த பூசகர்கள் மற்றும் பக்தர்கள் ஒருசிலரால் தூக்கி செல்லப்பட்டு வாகனத்தில் ஏற்றப்பட்டன்.இதுதொடர்பில்பிதுர்கடன்செலுத்த வந்தவர்கள் மிகுந்த மனவேதனைக்கு உள்ளானமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இதே வேளை நேற்று காலை 6.00 மணி முதல் 11.00 வரையான காலப்பகுதியில், கன்னியா வெந்நீரூற்று சிவன் ஆலயத்தில் ஏறத்தாழ 300 பக்தர்கள் ஒன்று கூடி ஆடி அமாவாசை பிதிர் கடன் கடமைகளை நிறைவேற்றினர்.














# கொழும்பில் நேற்று ஆடி அமாவாசையை ஒட்டி 2 இடங்களில் பிதிர்க்கடன் செலுத்தும் நிகழ்வு

ஆடி அமாவாசை தினமான நேற்று கொழும்பில் இரண்டு இடங்களில் பிதிர்க்கடன் செலுத்தும் நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டிலான் நிகழ்வு வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு அருகிலும், மட்டக்குளி காக்கைதீவு இந்து மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு முகத்துவாரம் கடற்கரையிலும் நடைபெற்றன.

பக்தர்கள் தமது முன்னோர்களை நினைத்து, கரையில் இருக்கும் ஆலயக் குருக்களின் வழிகாட்டலில் எள்ளும் தண்ணீரும் அர்ப்பணம் செய்து, அரிசி,மரக்கறி தானம் வழங்கி தீர்த்தம் ஆடுகின்றமையைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.சுரேந்திரன்).













# மனித – யானை மோதல்களை நிர்வகிக்க அம்பாறையில் மாவட்ட மட்டத்தில் குழு

**(பாறுக் ஷிஹான்)**

மனித – யானை மோதல்களை நிர்வகிக்கும் நோக்கமாக, அம்பாறை மாவட்ட செயலகத்தில், மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஏ.ஐ.விக்ரம மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அம்பாறை மாவட்ட மனித – யானை மோதல் நிர்வாக குழு ஒன்று நிறுவப்பட்டது.

கட்டுப்பாடு இன்றி முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், யானைகளின் இயற்கைப் பாதைகள் மற்றும் குடியிருப்புகள் அழிவடைதல், மேலும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பயனற்ற முயற்சிகள் என்பவையே, நாடெங்கும் பரவியுள்ள இந்த தீவிர மனித – யானை மோதல்களின் முக்கிய காரணங்களாகக் கருதப்படுகின்றன.

இந்த நெருக்கடியை நிர்வகிக்க விரைவான, திறமையான மற்றும் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் இன்றியமையாதவை. இந்த நிலையில், அறிவியல் அடிப்படையிலான நுண்ணறிவு மற்றும் பொறுப்பான உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் கூடிய குழுவே உருவாக்கப்பட்டது. இக்குழு மனிதர்களின் உயிர், சொத்துகள், விவசாயம் மற்றும் யானைகள் ஆகியவற்றை பாதுகாக்கும் நோக்கத்துடன் பணியாற்றவுள்ளது.

மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் யானை – மனிதர் மோதல்களை ஒட்டி 89 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டுள்ளமையையும், மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம அவர்கள் இதன்போது தெரிவித்தார்.

மேலும், வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கிழக்கு மாகாண துணை இயக்குநர் பிரசன்ன எல். விமலதாஸ, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தீர்வுகள் குறித்து விரிவாக விளக்கினார்.

இதில், பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் சார்பில் வந்த பிரதிநிதிகள் தங்களது பகுதிகளிலுள்ள யானை – மனித மோதல்களைப் பற்றிய விடயங்களைப் பகிர்ந்து, பல பரிந்துரைகளை முன்வைத்தனர். குறிப்பாக அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, நிந்தவூர் பகுதியில் யானை – மனித மோதல்களைப் பற்றியும், நீடித்து நிலைக்கும் பரிந்துரையாக **Bio-fence Barrier (Sustainable Plan) Lemon- Palmira Planting & Livelihood Development Plan** பிரதித் தவிசாளர் பாறுக் நஜித்தினால் முன்மொழியப்பட்டது. அது அதிகாரிகளால் வரவேற்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ ராசிக், நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் ஏ.அஸ்பர், இறக்காமம் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஐ முஸ்மி மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் எம்.பாறுக் நஜித் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், பிரதித் தலைவர்கள், வன விலங்கு பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், வன பாதுகாப்பு அதிகாரிகள், பொலிஸ், இராணுவம், சிவில் பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்பட்ட அனைத்து அரச அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.






# நிலத்தடி நீர்ப் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வுக்கான கண்காட்சிக் கூடம் இம்முறை நல்லூர்த் திருவிழாவில்!

நிலத்தடி நீர் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வுக்கான கண்காட்சிக் கூடம் இம்முறை நல்லூர் பெருந்திருவிழாவின் போது மக்கள் பார்வைக்காக உருவாக்கப்படவுள்ளது.

நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகில், அரசடி வீதியில் அமைந்துள்ள “நெசவு கைத்தொழிற் பயிற்சி நிறுவன வளாகத்தில்”, ஓகஸ்ட் 15 முதல் 24 வரை இக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் சுவீடன் விவசாய பல்கலைக்கழகத்தின் சுசூழல் தொடர்பாடலியல் துறை தகைநிலை பேராசிரியர் நடராஜா சிறீஸ்கந்தராஜா இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பல்வேறு பங்குதாரர்களின் பங்களிப்புடன் “வடமாகாணத்தின் நீர் பாதுகாப்பு – பங்காற்றல் செயல் ஆய்வு” எனும் தலைப்பிலான இச் செயற்றிட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல ஆய்வுத் துறைகளினது கூட்டு முயற்சியாக 2020ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வடக்கின் நீர் உரையாடல் வட்டமானது, மாகாணம் தழுவிய உரையாடல்களைசெயற்படுத்துவதோடுநீர்குறித்த பிரச்சினைகள் மற்றும் சவால்களை வெளிக்கொணர்வது, நிலைபேறான நீர் முகாமைத்துவத்தில் பலதரப்பட்ட நோக்குகளை அடைவதற்கு பரிந்துரை செய்வதையும் மேற்கொண்டு வந்துள்ளது. சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடையே காணப்படும் இடைவெளியைக் குறைத்து அவர்களை இணைத்து வடமாகாணத்தின் நீரின் எதிர்காலம், நிலத்தடி நீர் பிரச்சினைகள் குறித்தும் எடுத்துக்காட்டுகிறது.

வடமாகாணத்தின் அன்றாடம் விவசாயம், தொழில்துறைகள் போன்ற பல தேவைகளுக்கு நிலத்தடி நீரையே பெரிதும் நம்பியுள்ள நிலையில் இவ்வாறான தேவைகளின் அதிகரிப்புடன், சமூக மட்டத்தில் நிலத்தடி நீரின் அதிக அகத்துறிஞ்சல், மாசுபாடு மற்றும் கால நிலை மாற்றங்கள் என்பன இந்நீர் வளத்தின் நிலைத்திருப்பிற்கு அச்சுறுத்தலை அதிகரிப்பதனால், சமூக மட்டத்தில் நிலத்தடி நீர் தொடர்பான விழிப்புணர்வு, புரிந்துணர்வினை ஏற்படுத்தும் அவசியத்தை தீவிரப்படுத்துகின்றது.

கடந்த ஆண்டு நல்லூர் திருவிழாக் காலத்தில் யாழ் தீயணைப்பு நிலைய வளாகத்தில் தொடர்ச்சியாகப் பத்து தினங்கள் நிலத்தடி நீர் விழிப்புணர்வுக் கண்காட்சி வெற்றிகரமாக நடைபெற்று ஏராளமான பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது தெரிந்ததே. அவ்வகையில் இவ்வருடம் மேலும் வினைத்திறனான, மக்களின் ஈடுபாடு மிக்க ஒரு கண்காட்சியினை ஒழுங்கமைப்பதில் நாம் கவனம் செலுத்தவுள்ளோம்.

“நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி“ எனும் கருப்பொருள் நிலத்தடி நீர் பாதுகாப்பையும் அதன் நிலைத்திருப்பினையும் மக்கள் மத்தியில் குறிப்பாக இளையோர் மத்தியில் திறம்பட தெரிவிக்க முனைகிறது.

இக் கண்காட்சிக் கூடமானது நிலத்தடி நீரின் பாதுகாப்பில் பல்வேறு மட்ட பார்வையாளர்களின் செயற்படுதலை உறுதி செய்கிறது. பொதுமக்கள், மாணவர்கள், இளையோர்கள், விவசாயிகள், அரச அலுவலர்கள் போன்ற ஒவ்வொரு பிரிவினரின் பங்களிப்பினை இலக்காகக் கொண்டு கொள்கை வகுப்புக்கள் ஊடாக நிலத்தடிநீரின் நிலைபேறான முகாமைத்துவத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்த விழைகிறது.

நிலத்தடி நீர் பாதுகாப்பு தொடர்பாக பங்கேற்பாளர்களினை ஒருங்கிணைப்பதற்கும், அவர்களை ஈடுபடுத்தி தெளிவிப்பதற்கும் கண்காட்சிக்கூடக் கூறுகள் வடிவமைக்கப்படும். இவற்றில் நிலத்தடி நீரினை அவதானிக்கும் மாதிரி, நீரின் தரத்தை பரிசோதிக்கும் மாதிரி, நிலத்தடி நீரினை மீள்நிரப்பும் செயற்பாட்டினை வெளிப்படுத்தும் மாதிரி போன்றன காட்சிப்படுத்தப்படவுள்ளன. இவை அனைத்தும் நடைமுறையில் பார்வையாளர்களுக்கான கற்றல் மற்றும் அனுபவங்களை வழங்குகின்றன. மேலும் நிலத்தடி நீர் தலைப்புக்கள் தொடர்பாக நீர் வாண்மையாளர்கள் வழங்கும் குறுகிய வீடியோக்கள், செயலாற்றுகைகள் பார்வையாளர்களை கண்காட்சிக் கூடத்தில் பங்கேற்க வாய்ப்பளிக்கும் புதிர்கள், போட்டிகள் அமையவுள்ளன. அவர்களின் அறிவு மட்டத்தினை அளவிடவும் காட்சிப்படுத்தப்படும் தண்ணீர் மாதிரி வடிவமைப்பு நீரின் தரத்தை அளவிடும் பரிசோதனையின் முக்கியத்துவம் தொடர்பாகவும், புதிய தன்னார்வ தொண்டர்களை ஆள் சேர்ப்பு செய்வதற்கு வாய்ப்புக்களை வழங்கவும், நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு முயற்சிகளுக்கு சார்பான தனிநபர்களின் ஈடுபாடுகளையும் இக் கண்காட்சி உறுதி செய்கிறது – என்றார்.




# வவுனியா மாநகரசபை மடுவத்தில் சுகாதாரம் இல்லை எனக் கூறி தமது சுகாதாரப் பரிசோதகரையே கேவலப்படுத்துகின்றார் மேயர்!

## சீர் செய்து தரும்வரை இறைச்சி கடைகளை பூட்டத் தயார் என்கிறார் ஒப்பந்தக்காரர்

(கி.வசந்தன்)

மாநகர சபை மாடு அறுக்கும் மடுவத்தில் சுகாதாரம் இல்லை எனக் கூறி தமது சுகாதார பரிசோதகரை மாநகரசபை மேயர் கேவலப்படுத்துகிறார். நாங்கள் மாநகரசபை சுகாதாரப் பிரச்சனையைச் சீர் செய்து தரும் வரை இறைச்சிக் கடைகளைப் பூட்ட தயாராகவுள்ளோம் என வவுனியா மாநகரசபைக்கு உட்பட்ட நகர இறைச்சிக்கடை ஒப்பந்தகாரரான என்.றிசாம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, குருமண்காடு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா மாநகர சபையின் கீழ் உள்ள நகர மாட்டிறைச்சிக் கடை ஒப்பந்தகாரர் என்ற அடிப்படையில் நான் மக்களுக்கு சில விடயங்களை தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. கடந்த 5 நாள்களாக மாட்டிறைசிக் கடை மூடப்பட்டுள்ளது. அதன் ஒப்பந்த உரிமையாளர் என்ற அடிப்படையில் மக்கள ஏன் கடையை பூட்டியுள்ளீர்கள் என என்னிடம் கேட்கிறார்கள். மாநகரசபைக்குச் சொந்தமான மாடு அறுக்கும் மடுவத்தை பல லட்சம் ரூபா கொடுத்து குத்தகை அடிப்படையில்தான் நாம் அதனை எடுத்துள்ளோம். கடந்த 5 நாள்களுக்குமேல்மின்சாரம்துண்டிக்கப்பட்டிருந்தது.

அதிகாலை சென்று இருட்டுக்குள் மாடு அறுத்து வேலை செய்ய முடியாததால் நாம் அதனை மூடியுள்ளோம். வவுனியா மாநகர ஆணையாளரிடம் சென்று கதைத்ததன் அடிப்படையில் செவ்வாய் கிழமை சீர் செய்து மின் இணைப்பை பெற்றுத் தந்துள்ளார். அதற்கு அவருக்கு நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

மாநகர சபைக்கு உட்பட்ட மடுவத்தில் அவர்களது சட்ட திட்த்திற்கு அமையவே நாம் தொழில் செய்து வருகின்றோம்.

மாநகர சபை மடுவத்தில் சுகாதாரப் பிரச்சினை என ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் போட்டு எமக்கு வியாபாரம் குறைந்துள்ளது. மடுவம் எமது சொந்த இடம் என இவர்கள் நினைக்கிறார்கள். எங்களது இஷ்டத்திற்கு மாட்டை அறுத்து கடையில் விற்கிறோம் என நினைக்கிறார்கள். அப்படியில்லை. மாநகர சபைக்குரிய சுகாதார பரிசோதகர் மாட்டைப் பார்த்து இறைச்சியைக் கடைக்கு கொண்டு செல்வதற்கான அனுமதிகளை வழங்கிய பின்தான் கடைக்கு வருகிறது. ஆனால் இவர்கள் மாடுகளை அறுத்து முடிந்த பின் வரும் கழிவுகளைப் பார்த்துப் படம் எடுத்து சுகாதாரமில்லை எனப் போடுகிறார்கள். எந்த இடத்திலும் கழிவுகளை எடுத்தால் சுகாதாரம் இல்லாமல்தான் இருக்கும். பேஸ்புக்கிலும், சில இணையத் தளங்களிலும், சில மாநகர சபை உறுப்பினர்கள் தங்களது சமூக வலைத் தளங்களிலும் இதைப் பகிர்ந்துள்ளனர்.

மக்களால் நிராகரிக்கப்பட்டு போனஸ் ஆசனத்தில் வந்த சில உறுப்பினர்கள் அரசியல் ரீதியாக எம்மை பழிவாங்குவதற்கு இப்படி செய்கிறார்கள். கடந்த நகரசபையில் வெற்றி பெற்று முழுமையாக 5 வருடம் இருந்தார்கள். அப்போது இந்த சுகாதார சீர்கேடு அவர்களுக்கு தெரியவில்லை. மக்கள் விரும்பாமல் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அரசியல் ரீதியாக எம்மை பழிவாங்குகிறார்கள். இதில் எங்களுக்கு எந்தவிதப் பிரச்சுனையும் இல்லை. நாங்கள் ஒரு மாதம் கடை பூட்டவும் தயார். எங்களுக்கு பூட்டப்பட்டுள்ள காலத்திற்குரிய குத்தகைப் பணத்தைத் திருப்பி தருமாறு ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளோம்.

இறைச்சி விலையைக் கூட்டி விற்கிறோம் எனக் கூறுகிறார்கள். 40 கிலோ இறைச்சி வரக் கூடிய மாட்டை மக்களிடம் சென்று வாங்கும் போது 70 ஆயிரம், 75 ஆயிரத்திற்கு குறைய வாங்க முடியாது. அதை நாங்கள் 2,000 ரூபாய் படி விற்றால் எங்களுக்கு 80 ஆயிரம் ரூபாதான் வரும். இவர்கள் 40, 50 லட்சம் ரூபா குத்தகை பெறுகிறார்கள். அதை விட ஒரு மாட்டுக்கு தலைக்கு 300 ரூபா அறவிடுகிறார்கள். இறைச்சிக்கு கிலோவுக்கு 10 ரூபா அறவிடுகிறார்கள். எங்கள் ஊடாக இலாபம் எடுக்கிறார்கள். நாங்கள் கஷ்டப்படுகிறோம். இலாபம் எடுப்பது மாநகரசபை. நாங்கள் இதை விட்டுவிட்டுப் போகிறோம். மாநகரசபை மேயர் இந்தக் கடையைச் செய்யட்டும். கிலோக்கு வரும் 800 ரூபா இலாபத்தில் 200 ரூபாய் எமக்கு தரட்டும்.

சுகாதாரம் இல்லை எனச் சொல்லி தமது சபை சுகாதார பரிசோதகரை தான் கேவலப்படுத்துகிறார்கள். மாநகரசபை மேயர், சில உறுப்பினர்கள்தான் தெளிவு இல்லாமல் இருக்கிறார்கள். மக்கள் தெளிவாக உள்ளார்கள். இது எமது சொந்த இடமில்லை. இவர்கள் சுகாதார பிரச்சினையை சீர்செய்து தரும் வரை கடையைப் பூட்ட தயாராகவுள்ளோம். ஒரு மாதம் இல்லை, ஒரு வருடம் என்றாலும் பூட்ட நாம் தயார் என்பதை மனவருத்துடன் தெரிவிக்கின்றேன். – என்றார்.



# வெருகலில் ஆடி அமாவாசைத் தீர்த்தம்

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கிலங்கையின்வரலாற்றுச்சிறப்பு மிக்கதும், சின்னக்கதிர்காமம் எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றதும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என முறையாக அமையப் பெற்றதுமான ஈழமணித் திருநாட்டில் மகாவலியாள் தவழ்ந்து வளம் பல தரும் புண்ணிய ஸ்தலமான வெருகல் – வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீசித்திரவேலாயுதர் சுவாமி தேவஸ்தானத்தின் புனித தீர்த்தோற்சவ்சம் மகாவலி கங்கையில், ஆடி அமாவாசைத் தினமான நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த ஆடி அமாவாசை தீர்த்தோற்சவத்தில் நூற்றுக்கணக்கான சைவ பக்த அடியார்கள் கலந்து கொண்டு உயிரிழந்த தமது பெற்றோருக்கு பிதிர் கடனை நிறைவேற்றினர்.











# இந்தியாவும் இங்கிலாந்தும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

இந்திய பிரதமர் நரேந்திர மோடி - இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் முன்னிலையில், இந்தியா - இங்கிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நேற்று கையெழுத்தானது.

இதற்கான ஒப்பந்தத்தில், இந்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயலும், பிரிட்டன் வர்த்தக அமைச்சர் ஜோனாதன் ரெனால்ட்ஸும் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி,

"இந்தியா - இங்கிலாந்து பொருளாதார ஒத்துழைப்பில் இன்று ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகிறது. விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன.

இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை மேம்படுத்துவது, உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பது, விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள், சிறு, குறு, நடுத்தர தொழில் முனைவோர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குவது ஆகியவற்றில் இரு நாடுகளுக்கும் இருக்கும் உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது.

ஆடை, தோல், காலணிகள், கடல் சார் பொருள்கள், இரத்தினங்கள், நகைகள், கரிம ரசாயனங்கள், பிளாஸ்டிக், வாகன பாகங்கள், கைவினைப் பொருள்கள், சேவைகள் போன்ற உழைப்பு மிகுந்த துறைகள் வலுவான வளர்ச்சிக்கு தயாராக உள்ளன. உலகளாவிய உற்பத்தி மையமாக மாறுவதற்கான இந்தியாவின் பயணத்தை மேலும் விரைவுபடுத்துவதை இது உறுதி செய்யும்.

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இந்த ஒப்பந்தம், 'மேக் இன் இந்தியா' தலைமையிலான வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக்கு உத்வேகம் அளிக்கும். இந்த ஒப்பந்தம் இந்திய நுகர்வோருக்கு போட்டி விலையில் உயர்தர பொருள்களை வழங்கும். நமது நாடுகளுக்கு இடையே அதிக செழிப்பையும், ஆழமான உறவையும் ஏற்படுத்துவதற்கான வாக்குறுதியை இது கொண்டுள்ளது." என குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தம் குறித்துப் கருத்து தெரிவித்துள்ள பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர்,

"இந்தியாவுடனான இந்த முக்கிய ஒப்பந்தம், இங்கிலாந்தில் வேலை வாய்ப்புகள், முதலீடுகள் மற்றும் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான தாகும்.

நமது நாட்டில் இது ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது, வணிகங்களுக்கான புதிய வாய்ப்புகளைத் திறக்கிறது. அதோடு, உழைக்கும் மக்களுக்கு பொருளாதார நலன்களை அளிக்கிறது. இதுதான் மாற்றத்துக்கான எங்கள் செயல் திட்டம். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறிய பிறகு மேற்கொள்ளப்பட்டிருக்கும் மிக முக்கிய ஒப்பந்தம் இது." என தெரிவித்துள்ளார்.

# முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு ஆஞ்சியோகிராம் பரிசோதனை

## அப்போலோ மருத்துவமனை தகவல்

"முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நேற்று ஆஞ்சியோகிராம் பரிசோதனை செய்யப்பட்டது. முடிவுகள் இயல்பாக உள்ளன. அவர் இரண்டு நாள்களில் வழக்கமான பணிகளை மேற்கொள்வார்."

- இவ்வாறு அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நலக்குறைவு காரணமாக, சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மருத்துவமனையில் இருந்து கொண்டு, மக்கள் நலத்திட்டங்கள் தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், இன்னும் 2 அல்லது 3 நாள்களில் அவர் வீடு திரும்புவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனிடையே அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினை, அமைச்சர் துரைமுருகன் நேற்று நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.



முதல்வர் உடல்நிலை குறித்து அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

"முதல்வர் ஸ்டாலினுக்கு ஏற்பட்ட தலைசுற்றல் பிரச்சினை தொடர்பாக அப்போலோ மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மருத்துவப் பரிசோதனைகளில், இதயத்துடிப்பில் உள்ள சில வேறுபாடுகள் காரணமாகவே இந்த தலைசுற்றல் ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டது.

இதய சிகிச்சை மருத்துவர் ஜி .செங்குட்டுவேலு தலைமையிலான மருத்துவ வல்லுநர் குழுவின் அறிவுரையின்படி, இதனை சரி செய்வதற்கான சிகிச்சைமுறை அப்போலோ மருத்துவமனையில் நேற்று செய்யப்பட்டது. நேற்று மேற்கொள்ளப்பட்ட ஆஞ்சியோகிராம் சோதனையும் இயல்பாக இருந்தது. முதல்வர் ஸ்டாலின் நலமாக உள்ளார். தனது வழக்கமான பணிகளை இரண்டு நாள்களில் மேற்கொள்வார்கள்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பாகிஸ்தானின் 6 ட்ரோன்களை சுட்டுவீழ்த்திய இந்திய இராணுவம்

## எல்லைப்பகுதியில் பதற்றம்

இந்திய எல்லைக்குட்பட்ட பஞ்சாபில் பாகிஸ்தானின் 6 ட்ரோன்களை எல்லைப் பாதுகாப்புப் படை சுட்டு வீழ்த்தியதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

இதனால் எல்லைப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள இந்தியா - பாகிஸ்தான் எல்லையில், ட்ரோன்கள் பறந்ததை இந்திய எல்லை பாதுகாப்பு படையினர் கண்டறிந்தனர்.இதன்போது அமிர்தசரஸில் பாகிஸ்தானின் 5 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

அட்டாரி கிராமத்தில் மற்றுமொரு ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டது. அத்துடன் 3 கைத் துப்பாக்கிகள், 1 கிலோ ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

டர்ன் தரன் மாவட்டத்தில் உள்ள தால் கிராமத்திற்கு அருகிலுள்ள ஒரு நெல் வயலில் இருந்து பாதுகாப்பு படையினர் துப்பாக்கி பாகங்கள் மற்றும் ஆயுதங்களை மீட்டனர்.

பஞ்சாபில் பாகிஸ்தானின் 6 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதால், மிகப் பெரிய சதி செயல் முறியடிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# 50 பேருடன் மாயமான ரஷ்ய விமானம்: எரிந்த பாகங்கள் மீட்கப்பட்டன எனத் தகவல்

ரஷ்யாவின் கிழக்கு அமூர் பகுதியில் காணாமல்போன பயணிகள் விமானத்தின் எரியும் பாகத்தை, மீட்பு ஹெலிக்கொப்டர் கண்டுபிடித்ததாக அந்நாட்டின் அவசரகால அமைச்சக தரப்பு தெரிவித்துள்ளது.இந்த விமானத்தில் பயணிகள் உட்பட 50 பேர் இருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து ரஷ்யாவின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம், "விமானம் ரேடார் கட்டுப்பாட்டில் இருந்து விலகி மாயமானது. அந்த, விமானத்தின் எரிந்த பாகங்கள் கண்டறியப்பட்டுள்ளன." என்று தெரிவித்துள்ளது.

உள்ளூர் அதிகாரிகள், இந்த விபத்தில் யாரும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என தெரிவித்தனர்.

ரஷ்ய – சீன எல்லையில் உள்ள பிளாகோவெஷ்சென்ஸ்க் நகரத்திலிருந்து டின்டா நகரத்திற்குச் சென்ற விமானத்தில் 5 குழந்தைகள் உட்பட 43 பயணிகள் மற்றும் 6 பணியாளர்கள் இருந்தனர். 50 பேருடன் சென்ற இந்த பயணிகள் விமானம் ரஷ்யாவின் கிழக்கு அமூர் பகுதியில் சென்றபோது ரேடாரில் இருந்து காணாமல் போனது. இதனை அமூர் பிராந்திய ஆளுநர் வாசிலி ஓர்லோவ் உறுதி செய்துள்ளார்.சைபீரியாவைச் சேர்ந்த அங்காரா நிறுவனத்தால் இயக்கப்படும் இந்த விமானம், டின்டா விமான நிலையத்தை நெருங்கும் போது ரேடாரில் இருந்து மாயமானதாகவும்தகவல்கள்வெளியாகியுள்ளன.





# காசாவில் உணவின்றி 12 குழந்தைகள் மரணம்

காசாவில் கடந்த இரண்டு நாள்களில், 33 பேர் உணவின்றி உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதில் 12 குழந்தைகள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் காசாவில் உணவின்றி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, 80 குழந்தைகள் உட்பட 101 ஆக உயர்ந்துள்ளது.

ஆயிரக்கணக்கானோர் மரணத் தின் விளிம்பில் இருக்கின்றனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

உணவுக்காகக் காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,054 ஆக உயர்ந்துள்ளது.





# கம்போடியாவுடனான மோதலில் இரு தாய்லாந்து பிரஜைகள் பலி

தாய்லாந்துக்கும் கம்போடியாவிற்கும் இடையிலான சர்ச்சைக்குரிய எல்லைக் கோயில் அருகே நடந்த மோதலில் இரண்டு தாய்லாந்து பிரஜைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் இரண்டு வீரர்கள் காயமடைந்ததைத் தொடர்ந்து, தாய்லாந்து எப் -16 போர் விமானத்தை நிறுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐந்து எப் -16 விமானங்கள் தயார் நிலையில் உள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மோதலுக்கு இரு நாடுகளும் ஒன்றையொன்று குற்றம் சாட்டி வருகின்றன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# இன்றைய ராசி பலன்கள் -25.07.2025




இன்று சில சௌகரியங்களை தியாகம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். திறமையான திட்டமிடல் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி அடையலாம். ஆன்மீகம் சம்பந்தமான பயணங்கள் இன்று உங்களுக்கு ஆறுதலையும் திருப்தியையும் அளிக்கும்.

பணியில் அமைதியின்மையும் பதட்டமும் காணப்படும். அதிக வேலைச் சுமை கவலையை அளிக்கும்.

உங்கள் முனைப்பான உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் நீங்கள் வெளிப்படுத்தலாம். இது நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பதால் இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

பணவரவு உறுதியற்ற நிலையில் காணப்படுகிறது. பெருகிவரும் செலவினங்களால் கவலை ஏற்படும்.

தொண்டை வலிக்கான வாய்ப்புகள் காணப்படும். குளுமையான உணவு உட்கொள்வதைத் தவிர்க்கவும்.




இன்றைய நாள் திருப்திகரமாக இருக்காது. அவநம்பிக்கை உணர்வுகள் உங்களை வளரவிடாமல் தடுக்கும். பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். கவனக் குறைவான பேச்சுக்களுக்கான வாய்ப்புகள் உள்ளன. தியானம் மேற்கொள்வது பயனளிக்கும்.

பணிச்சூழல் ஊக்கமளிக்கக் கூடியதாக இருக்காது. குறித்த நேரத்தில் பணிகளை முடித்தாலும் பணியில் தவறுகள் காணப்படும்.

உங்கள் மனதில் ஏற்படும் மாறுபாடுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். விஷயங்களை எளிதாக எடுத்துக்கொள்வதன் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

பெருகி வரும் செலவினங்களால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் மிகுந்த கவலையை அளிக்கும்.

மனஅழுத்தத்தின் காரணமாக முதுகுவலி ஏற்படலாம். கடவுளை வழிபட்டு ஆசுவாசமடைந்து ஆறுதல் பெறலாம்.




இன்றைய நாள் மகிழ்ச்சிக்கான மற்றும் மறக்க முடியாத நினைவுகளை அளிக்கும் நாளாக அமையும். புதிய தொடர்புகள் உருவாக்குவதும் சமூகக் கூட்டங்களில் கலந்து கொள்வதும் உங்களை மகிழச் செய்யும்.

பணிச்சூழல் காரணமாக உங்கள் செயல்பாட்டில் தாமதம் காணப்படும். பணியில் திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும் வெற்றிக்கு வழிவகுக்கும்.

இன்று எளிதில் கோபத்துக்கு ஆளாவீர்கள். உங்களின் இந்த உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் உங்கள் துணையுடனான நல்லுறவு பாதிக்கப்படும். மகிழ்ச்சியுடன் இருக்க இத்தகைய உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகரிக்கும்.

கண்களில் எரிச்சல் இருக்கும். கண்களுக்கு தகுந்த மருத்துவம் மேற்கொள்வது பயனளிக்கும்.




இன்று உங்கள் செயல்களில் விரைந்து முடிவெடுக்க சாதகமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். பயணங்களால் நல்ல பலன் கிடைக்கும்.

பணியிடத்தில் திறமையுடன் பணியாற்றுவீர்கள். உங்கள் செயல்பாட்டுக்கு மேலதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் வெளிப்படையான மகிழ்ச்சியான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இருவரும் ஒருங்கிணைந்து மகிழ்வாக இருக்க இது உதவும்.

நிதிவளர்ச்சி மகிழ்ச்சியை அளிக்கும். ஆக்கமான விஷயங்களுக்காக இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.

நல்ல ஆரோக்கியம் காணப்படும். மனதைரியத்துடன் இருந்தால் நல்ல தேக ஆரோக்கியம் சாத்தியமாகும்.




இன்றைய நாள் துடிப்பான நாளாக இருக்கும். இன்று சந்தோஷமான மன நிலையில் இருப்பீர்கள். உங்களிடம் தலைமை பொறுப்பிற்கான தகுதி காணப்படும். அதனால் உங்கள் தகுதி உயரும்.

பணிச்சூழல் மகிழ்ச்சிகரமாக அனுபவிக்கத்தக்கதாக காணப்படும். குறித்த நேரத்திற்குள் விரைந்து பணியை முடிப்பது உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்க உதவும்.

உங்களின் மகிழ்வான பேச்சு உங்கள் துணையாரை மகிழ்விக்கும். மற்றும் திருப்தியை அளிக்கும் உங்கள் அன்பான அணுகுமுறை உங்கள் துணையுடனான பிணைப்பை வலுவாக்கும்.

இன்று பணம் உபரியாக காணப்படும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களால் சேமிக்கவும் முடியும்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களின் மகிழ்ச்சியான மனப்பான்மை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.




உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும். உங்கள் செயல்களில் வெற்றி பெற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இது உகந்த நாள் அல்ல.

அதிகமான பணிச்சுமை உங்கள் கவலையை அதிகரிக்கும். பணியில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளன.

உங்கள் துணையுடன் நட்புணர்வை பகிர்ந்து கொள்ள வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள இது மிகவும் முக்கியம்.

பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அதிகரிக்கும் பொறுப்புகளால் ஏற்படும் செலவினங்களை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

மனஅழுத்தத்தின் காரணமாக முதுகுவலி ஏற்படலாம். கடவுள் வழிபாடு மூலம் ஆறுதல் அடையலாம்.




இன்று சற்று மந்தமாக காணப்படும். இன்று உங்கள் மனதில் எழும் கேள்விகளுக்கு பதில் கிடைப்பது அரிது. இதனால் குழப்பமான மனநிலை காணப்படும்.

பொறுமையான அணுகுமுறையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். சகஊழியர்களுடன் சில தொந்தரவுகளை சந்திக்க நேரலாம்.

தொடர்பாடலில் காணப்படும் இடைவெளி காரணமாக துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும் உங்கள் துணையாரின் கருத்துக்கு முரணான கருத்தை வேறு விதமாக பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யவும் கூடுதல் செலவினங்களை கையாளவும் கடன் வாங்க நேரிடலாம்.

மனஅழுத்தம் காரணமாக கால்களில் வலி ஏற்படும். தியானம் மேற்கொள்வது பயனளிக்கும்.




இன்று உங்களுக்கு பல வாய்ப்புகள் கிடைக்கும். அதனை பயன்படுத்தி இன்றைய நாளை அனுகூலமாக்கிக் கொள்ளுங்கள்.

இன்று உங்கள் மனதில் பல எண்ணங்கள் உருவாகும். அதன் மூலம் உங்கள் தனித்தன்மையை வெளிப்படுத்துவீர்கள். அதற்குரிய பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று தேவையற்ற விஷயங்களுக்காக சூடான வாக்குவாதத்தில் ஈடுபட நேரிடலாம்.

இன்று சேமிப்பு அதிகரிக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு இன்று கூடுதல் பணவரவும் சலுகைகளும் கிடைக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுகளும் இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் -25.07.2025




இன்று வேலைகளை எளிதாகச் செய்ய முடியாத அளவுக்கு கடினமான சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு வேலை செய்வதன் மூலம் வெற்றி காணலாம். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் முற்போக்கான பலன்கள் கிடைக்காது. உங்கள் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் வேறு வேலை மாற்றம் உங்களுக்கு தேவைப்படும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது நல்லுறவை மிகவும் பாதிக்கும் எனவே உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவது மிகவும் நல்லது.

நிதிவளர்ச்சி ஏமாற்றத்தை அளிக்கும். கூடுதலான தேவையற்ற செலவினங்களை சமாளிக்க வேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் குழந்தைகளின் மருத்துவத்துக்காகச் செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று உங்கள் பணிகள் முடிக்கப்படாமல் இருக்கும். இன்றைய விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையாது என்ற காரணத்தினால் உங்கள் எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்வது சிறந்தது.

பணியில் முன்னேற்றம் காண நம்பிக்கையுடனும் சாந்தமாகவும் பணியாற்ற வேண்டும். உங்கள் செயல்திறன் மீது உங்களுக்கு அதிருப்தி நிலவும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கோ அல்லது புனித ஸ்தலங்களுக்கோ சென்று மகிழ்வீர்கள். மகிழ்ச்சியான ஒரு நல்ல நிலை காணப்படும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இருக்கும் பணத்தை கவனமாக பாதுகாக்க வேண்டும். சேமிக்க வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம்.




இன்று செய்யும் அனைத்து செயல்களிலும் நடைமுறை அணுகுமுறையை கையாள வேண்டும். உங்களை உற்சாகப்படுத்திக்கொள்வதன் மூலம் சோர்வை வென்று நம்பிக்கையுடன் இருக்கலாம்.

அதிக பணிச்சுமை கவலையை அளிக்கும். இது பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தும். இந்த உணர்வு காரணமாக உங்களால் திறமையாக பணியாற்ற இயலாது.

நீங்கள் விஷயங்களை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். நல்லுறவிற்கு எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளும் அணுகுமுறை தேவை. குழப்பமான மனநிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

நிதிவளர்ச்சி திருப்தி அளிக்கும் வகையில் இருக்காது. பண இழப்புகளுக்கான வாய்ப்புகள் இன்று காணப்படும்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம். சரியான நேரத்தில் உணவு உட்கொள்வது பலனளிக்கும்.




மிகவும் பொறுமையுடன் இருக்க வேண்டும். வாழ்க்கையில் சாதாரணமான அணுகுமுறை வேண்டும். ஆன்மீக காரியங்களில் நேரத்தை செலவழிப்பதன் மூலம் உங்களுக்கு வளர்ச்சி கிடைக்கும்.

பணியில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். புதிய வேலைவாய்ப்பிற்கான வாய்ப்புகள் சாத்தியம். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நன்றாகப் பேசி நட்புணர்வுடன் இருக்க வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இது அவசியம்.

பணப்புழக்கம் இன்று மகிழ்ச்சியை அளிக்கும் வகையில் இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். பணத்தை சரியான முறையில் பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். திடமான உடல்நலத்தை பராமரிப்பீர்கள்.

# கிண்ணியாவில் உணவு ஒவ்வாமையினால் ஐம்பதுக்கும் மேற்பட்டோருக்குப் பாதிப்பு

## சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்.அஜீத் தகவல்



(ஏ.எச்.ஹஸ்பர்)

கிண்ணியாவில் உணவு ஒவ்வாமையினால் ஐம்பதுக்கும் மேற்பட்டோருக்குப் பாதிப்பு ஏற்பட்டமையை அடுத்து கிண்ணியா பிரதேசத்தில் உள்ள சகல உணவகங்களிலும் பரிசோதனை இடம் பெற்று வருவதாக கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்.அஜீத் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கடந்த 21 ஆம் திகதி கிண்ணியா பிரதான வீதியில் உள்ள உணவகம் ஒன்றில் இரவு நேர சாப்பாடாக பரோட்டா, மயோனஸ்,சுட்ட கோழி உண்டவர்களுக்கு அடுத்த நாள் காலையில் தலைச்சுற்று, வாந்திபேதி, காய்ச்சல் என அறிகுறிகள் தென்பட்டன. உணவு ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டு கிண்ணியா தளவைத்தியசாலையில் 39 பேரும், மூதூரில் 05 பேரும், குச்சவெளியில் 05 பேரும் என 49 நபர்களும், தனியார் மருந்தகங்களில் 20 பேர்களும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்கள் அதே கடையில் உணவு உட்கொண்டவர்களாவர். தற்போதுவர்கள் சிகிச்சை அளிக்கப்பட்டுத் தேறி வருகின்றனர். இதில் கிண்ணியாவில் 03 சிறுவர்களும், மூதூரில் 2 சிறுவர்களும் உள்ளடங்குவர். ஒரே குடும்பத்தில் ஆறு பேர்கள் கூட பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து அந்த உணவகத்துக்கு எங்கள் குழுவினர் சென்று, உணவு மாதிரிகளை கொழும்பு ஆசுஜ க்கு அனுப்பியுள்ளோம். முடிவுகளுக்காய்க் காத்திருக்கிறோம். இருந்தபோதிலும் உணவு ஒவ்வாமையே இதற்குக் காரணம் என்பது ஆரம்பக் கட்ட விசாரனை மூலம் தெரியவருகிறது. உணவகங்களில் இவ்வாறான தவறுகள் வரக் கூடாது என்பதற்காக பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளோம். முன்னரும் நீதி மன்ற வழக்குத் தொடரப்பட்டுள்ளது. எனவே பொது மக்கள் இவ்வாறான உணவுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். - எனவும் அவர் மேலும் கூறினார்.